தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**15 வயதுப்பிரிவு**
(01.01.2004 – 31.12.2005 வரையில் பிறந்தோர்)

## ஆனந்தபுரம் ஓர் போர்க்காவியம்

''சங்கு முழங்கடா தமிழா இந்தச் சாதனை பாடடா கவிஞா'' என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் பொங்கும் வெற்றிச் சாதனைகளை புதிய புறமாக்கிய பெருங்கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் முழக்கத்திற்கு அத்தனை பொருத்தமான புரட்சியின் பூமி எங்கள் தாயகம்.

எல்லாளன் வழிவந்த ஒப்பற்ற தலைவனின் உறுதியான வழிகாட்டலில் எதிரியைத் தமிழீழ எல்லையை விட்டு விரட்டியடித்த சமர்க்கள நாயகர்கள் வாழ்ந்த நிலம். எம் வீரச்சேனையால் வெற்றி கொள்ளப்பெற்ற படைநகர்வுகள் அத்தனைக்கும் தனிவரலாறு உண்டு. ஆயினும், ஆனந்தபுர முற்றுகைச் சமர் அளந்து கூறிவிட முடியாத ஓர் ஒப்பற்ற போர்க்காவியம்.

பத்து ஆண்டுகள் பறந்தோடிப் போயின. ஆனந்தபுர அக்கினிச்சுவாலைகள் இன்னும் அப்படியே நெஞ்சோடு தகிக்கின்றன. என்றென்றும் மனதை விட்டகலாத, வியப்பின் உச்சியில் ஆழ்த்திய போர் உத்திகளைக் கண்டு எதிரி திக்குமுக்காடிய களங்களுள் ஆனந்தபுரம் ஒன்றாயினும், சற்றே வேறுபட்ட சமர்க்களம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள ஆனந்தபுரம், இன்று கனதியான காவிய பூமியாயிற்று. படிப்படியான தமிழின அழிப்பின் அளவுகடந்த கொடூரத்தை நிகழ்த்தியவாறு மாவிலாறு தொடங்கி பல்குழல் எறிகணைகளாலும் விமானக்குண்டுவீச்சுக்களாலும் மக்களைக் கொன்றழித்தபடியும், சரமாரியான சூட்டுவலுவுடனும் இராணுவம் படையெடுத்தது. அதிரடியான எதிர்த்தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு இராணுவ நகர்வைத் தடுத்து நிறுத்தினர்.

இராணுவம் சில நாட்களின் பின்னர் ஆனந்தபுரத்தை முற்றுகை கொண்டது. உலக வல்லரசு நாடுகள் பலவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறீலங்கா அரசோடு கைகோர்த்து, ஆனந்தபுரத்திலே வைத்து எமது விடுதலைப் போராட்டத்தை புதைத்துவிட எண்ணின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் படையணிகள் தமது போர் ஆற்றலைத் திரட்டிக் களமாடின. அசாத்திய துணிச்சலுடனும் அளவற்ற நெஞ்சுரத்துடனும் போராளிகள் நின்றனர். உணவு, உறக்கம், ஓய்வு என்பவற்றுக்கு அங்கே இடமேயில்லை. சிறிதளவு உலருணவு கிடைத்த போதும் உண்ணும் மனநிலை யாருக்கும் இருக்கவில்லை.

மீண்டும் மீண்டும் முன்னேறும் இராணுவத்தைத் தடுத்தபடியே களமாடிய எங்கள் வீரவீராங்கனைகள் விழுப்புண்களைச் சுமந்தனர். அவர்களுக்கான மருத்துவ வசதிகள் ஓரளவே இருந்த போதும், மருத்துவ அணி முழுமூச்சாகச் செயற்பட்டது. சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் தமது வலிகளையும் பொருட்படுத்தாது மீண்டும் காவலரண்களில் நின்றனர். வீரச்சாவுகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

உறவுகள் பல அருகருகே ஒரே குறிக்கோளுடன் களங்கண்ட காதை ஆனந்தபுரத்தின் நெஞ்சு கனக்கும் வரலாறு. நெடுந்தூரத் தாக்குதல் கருவியான ஆட்லறி பீரங்கியை குறுகிய தூரத்தில் வைத்து எதிரிக்கு நேரடிச்சூடு வழங்கி புதுவரலாற்றைப் படைத்தனர் எங்கள் போராளிகள்.

அரசின் படையெடுப்புக்குத் துணைநின்ற அகிலமே வியப்பில் ஆழ்ந்திருக்க, 2009 ஏப்ரல் ஐந்தாம் நாள் அதிகாலை ஆனந்தபுரத்தினுள்ளிருந்த படையணிகள் பாரிய முற்றுகையுடைப்பை மேற்கொண்டு எதிரியின் கனவைத் தகர்த்தன.

வஞ்சனை செய்து வீசப்பட்ட நச்சுப் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டது ஆனந்தபுரம். நச்சுக் குண்டுகளின் புகை மண்டலத்தினால் பல போராளிகள் மயக்கமுற்றார்கள். இன்னும் பலர் எரிகுண்டுகளின் எரிகாயங்களுக்கு உள்ளானார்கள். குண்டுகளினால் அதிர்ந்து நிலைகுலைந்த ஆனந்தபுரம் ஓர் சாக்களம் போன்றே தோற்றமளித்தது.

கற்பனைக்கும் எட்டாத சாதனைகளால் பல்முகத்திறன்களில் வீரம் சமைத்து நின்ற வீரத்தளபதிகளான பிரிகேடியர்கள் தீபன், ஆதவன் அல்லது கடாபி, மணிவண்ணன், விதுஷா, துர்க்கா, மற்றும் கேணல்களான நாகேஷ், தமிழ்ச்செல்வி போன்றோருடன் பல நூற்றுக்கணக்கான போராளிகள் ஆனந்தபுரத்திலே ஆகுதியானார்கள்.

'வீரர்களின் விதைகுழி மண்ணில் இல்லை, எங்கள் நெஞ்சில்' என்று சீறும் உணர்வுகள் காற்றைக்கிழிக்க தமிழர் நாம் எழுச்சியோடு உறுதி கொள்வோம்.

'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'

நன்றி,
வணக்கம்